★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✯ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆடி 1உ திங்கள் (16—7—56) ★ ★ வெளியூர்: ஆடி 2உ செவ்வாய் (17—7—56) [இதழ் 27

மனித மாமிசம் உண்ணும் வகுப்பு!

ஆசாமி ஒருவர் கைது

மனித மாமிசம் உண்ணும் 'வகுப்பு' ஒன்று இருக்கிறதாம்! அதன் பெயர் 'அகோரி' என்பதாம்!

அந்த வகுப்பைச் சேர்ந்த சோகன்லால் சாது என்பாரும், இன்னும் மூவரும், குருக்ஷேத்திரத்தில் நடைபெறும், 'சூரிய கிரகண'த் திருவிழாக் கண்காட்சியில் கைது செய்யப்பட்டிருக்கின்றனராம். இந்த 'ஆசாமி', முன்பொரு முறையும் இதே திருவிழாவில், சந்தேகப்படும் வகையில் நடந்து கொண்டதற்காகக் கைது செய்யப்பட்டாராம்!

டில்லிக்கு எதிராக:

பீகார் சட்டசபை உறுப்பினர் போர்க்கோலம்

சட்டசபை முடிவை புறக்கணித்தால் இராஜிநாமாச் செய்வர்

மசோதாவை மக்கள் சபையில் தாக்கல் செய்யுமுன்

டில்லி யோசிக்க வேண்டும்

மாநில மந்திரி மிரட்டுகிறார்

புதுடில்லி, ஜூலை 15—

"மேற்கு வங்கம், மற்றும், பீகார் நில மாற்ற மசோதா குறித்த பீகார் சட்டசபையின் தீர்ப்பை மதிக்க மறுத்து, மசோதாவை மக்கள் சபையில் டில்லி சர்க்கார் கொண்டுவந்தால், பீகார் சட்டசபையில் உள்ள எதிர்க்கட்சி உறுப்பினர் 87 பேரில் 83 பேர் தங்கள் பதவியை இராஜினமாச் செய்வர்; தேர்தல் நெருங்கும் நேரத்தில் நாங்கள் ஒன்றும் மாநிலத்தில் குழப்பம் ஏற்படுத்த விரும்பவில்லை,"

என்று, பீகார் மாநிலத் தகவல் அறிவிப்பு மந்திரி மகேஷ் பிரசாத் சின்ஹா இங்கு கூறியிருக்கிறார்.

பிரதமர் நேரு திரும்புவதற்கு முன்பு டில்லி மக்கள் சபையில் அந்த மசோதா கொண்டுவரப்பட மாட்டாது என்று தான் நம்புவதாயும் அவர் கூறினாராம்.

மசோதாவைப் பற்றி அந்த மந்திரி கூறியதாவது:—

"மாநில புனரமைப்பு விவகாரத்தில், மத்திய சர்க்கார், மாநில சர்க்காரின் கருத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்று அரசியல் சட்டம் கூறுகிறது; கருத்து வேறுபாடு இருந்தால், மத்திய சர்க்கார், மாநில சர்க்காரின் கருத்தைப் புறக்கணித்துவிடலாம்; ஆனால் பீகார் விவகாரத்தில், சட்டசபை, இந்த மசோதாவை ஒரேமுகமாக எதிர்த்து நிராகரித்திருக்கிறது; எனவே, குடியரசுத் தலைவரும், மத்திய சர்க்காரும், பீகார் சட்டசபையின் ஒருமுகப்பட்ட அபிப்பிராயத்தை உதறித் தள்ளிவிட்டு மேலால் நடக்க வேண்டுமா என்பதை யோசித்தாக வேண்டும்."

மக்கள் சபைமுன் 'சத்தியாக்கிரகம்?'

கைவிடும்படி இந்திய சர்க்கார் சட்டமந்திரி கோருகிறார்

புதுடில்லி, ஜூலை 15—

மாநில சீரமைப்பு மசோதா பரிசிலனையின் பொழுது, மக்கள் சபைமுன் 'சத்தியாக்கிரகம்' செய்ய வேண்டுமென்ற யோசனையைக் கைவிடும்படி இந்திய சர்க்கார் சட்ட விவகார மந்திரி எச். வி. படாஸ்கர் மகாராஷ்டிரர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

'நாட்டின் விடுதலைக்கு மீண்டும் போராட்டம் துவங்குவோம்'

படைகளைத் திரும்பப் பெறுமாறுபிரதமர்எச்சரிக்கை

டுனீசியா, ஜூலை 15—

டுனீசியாவிலிருந்து பிரெஞ்சுத் துருப்புகள் திரும்பப் பெறப்பட வேண்டுமென்றும், இன்றேல், நாட்டின் முழு விடுதலைக்காக டுனீசியா மீண்டும் போராட்டத்தைத் துவக்கும் என்றும் டுனீஷியாப் பிரதமர் பிரெஞ்சு சர்க்காரை எச்சரிக்கை செய்துள்ளார்.

பிரெஞ்சு ஆதிக்கத்தை எதிர்த்து அல்ஜீரிய தேசியவாதிகள் நடத்தும் போராட்டத்தை ஆதரிப்பதாகவும் அவர் கூறினார்.

அந்தமான், நிகோபார் தீவுகளில் சாலை அபிவிருத்திக்காக இந்திய சர்க்கார் இதுவரை ரூ 45,32,160 வரை ஒதுக்கித் தந்திருப்பதாகத் தெரியவருகிறது.

பம்பாய் மந்திரி ஹிரே 'குட்டிக்கரணம்'

சம்யுக்த மராட்டிய கோரிக்கையை கேலி பேசுகிறார்

நேருவின் தலைமையில் தனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறதாம்!

நாசிக், ஜூலை 15—

பிரதமர் நேருவின் தலைமையில் தனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருப்பதாக பம்பாய் ரெவினியூ மந்திரி ஹிரே கூறியதாகத் தெரிய வருகிறது.

பம்பாய் பற்றிய நேருவின் முடிவுக்குத் தான் தலை வணங்குவதாகவும் அந்த மந்திரி கூறினாராம்.

நாசிக் மாவட்ட காங்கிரஸ் ஊழியர் கூட்டம் ஒன்றில் பேசும்போது மேலும் அவர், மராட்டிய காங்கிரஸ் தலைவர்கள் 'சம்யுக்த மராட்டிய விவகாரத்தைச் சரிவரக் கையாளவில்லை' என்றும் குறை கூறினாராம்.

'தங்கள் கோரிக்கை பற்றி பல்லவியை (!) திரும்பத் திரும்பப் பாடிக்கொண்டிருக்கும் [illegible] காங்கிரஸ் ஊழியர்கள், மராட்டிய காங்கிரசைப் பலப்படுத்த வேண்டும்' என்றும் உபதேசித்தாராம்!

மாவட்ட காங்கிரஸ் அலுவலகத்தின்முன் ஆர்ப்பாட்டம் நடத்த முயன்ற சம்யுக்த மராட்டிய ஆதரவாளர்கள் 30 பேரை போலீசார் கைது செய்து, பின்னர் விடுவித்தனராம்.

சர்க்கார் மேற்கொள்ளும் சமூக சேவை

'கோரிய பலன் தரவில்லை; மக்களின் நம்பிக்கையைப் பெறவில்லை'

பாரத் சேவக் சமாஜத்தை ஒழிக்க வேண்டுமென்கிறார் எச். என். குன்ஸ்ரு

அம்பாலா, ஜூலை 15—

"அரசியலுக்கும்—சமூக சேவைக்கும் உள்ள தெளிவான வேறுபாடு, இப்போது, சமூக சேவை இல்லாத அரசியல், உபயோகமற்ற வெறும் பொழுதுபோக்கு என்று கருதப்படும் அளவுக்கு மறைந்துவிட்டது.

"வேறெப்போ[illegible]துமில்லாத அளவு இப்போதுதான், சமூக சே[illegible]த்தியாவசியம் அதிகரித்திருக்கிறது. ஏனெனில், [illegible]துதான், மக்கள், உரிமைகள் பற்றித் தெளிவும் உணர்[illegible]ம பெற வேண்டியவர்களாயுள்ளனர்,"

என்று, பஞ்சாப் மாநில சேவா சமிதியின் கூட்டம் ஒன்றிற்குத் தலைமை வகிக்கும்போது, தோழர் எச். என். குன்ஸ்ரு, எம். பி. குறிப்பிட்டிருக்கிறார்.

"தன்னிச்சையாக மேற்கொள்ளப்படும் சமூக சேவை, மக்களின் ஆதரவைப் பெறக்கூடியது; ஆனால், சர்க்கார் மேற்கொள்ளும சமூக சேவை, பணத்திற்கு மட்டுமே மதிப்பளிக்கிறது—கோரிய பலனைப் பெறுவதில்லை"

என்று, அவர் மேலும் கூறிவிட்டு, பாரத் சேவக் சமாஜம், சமுதாய நலத் திட்டங்கள் இவற்றை எல்லாம் கண்டித்திருக்கிறார்.

'மக்கள் தாங்களாகவே முன்வந்து, இதுபோன்ற சமூக சேவா நடவடிக்கைகளில் ஈடுபட்டு, மக்களின் ஆதரவையும், நம்பிக்கையையும் பெறத் தவறிவிட்ட—சர்க்காரின் நேரடிப் பார்வையில் நடைபெறும் சமூக சேவை இயக்கங்களை ஒழிக்க வேண்டும்,'

என்றும் அவர் கேட்டுக்கொண்டாராம்!

"பாரத் சேவக் சமாஜ் போன்ற இயக்கங்களுக்குத் தரப்படும் பண உதவி முழுவதும், ஏற்கனவே உள்ள சமூக சேவா இயக்கங்களுக்குத் திருப்பப்பட வேண்டும்" என்றும் அவர் கோரினாராம்!

ரூ. 90 இலட்சம் நஷ்டமாம்!

1954—55-ம் ஆண்டில் இந்திய விமானப் போக்குவரத்து கார்ப்பரேஷன் ரூ. 90.15 இலட்சம் வரை நஷ்டமடைந்திருப்பதாக அது, இந்திய[illegible] பேரரசிற்குத் தாக்கல் [illegible]துள்ள இரண்[illegible]டு அறிக்[illegible]ப்பிட்டுள்ள[illegible]

'மீண்டும் உணவுக் கட்டுப்பாடுகள் வராமலிருக்க அதிகாரம் முழுவதையும் பயன் படுத்துவேன்'

மத்திய உணவு மந்திரி உறுதி கூறுகிறார்

சமூக விரோதச் செயல்களுக்கு ஊக்கமளிக்காதிருக்க வியாபாரிகளைக் கோருகிறார்

போபால், ஜூலை 15—

"சென்ற அக்டோபரிலிருந்து உணவுத் தானியங்களின் விலைகள் உயர்வாகவே இருந்துவந்துள்ளன; பதுக்கல்கள் இதற்கு ஒரு விதத்தில் காரணம் என்று எண்ண வேண்டியிருக்கிறது; கொள்ளை இலாபமடிப்பதற்காக வாழ்க்கைக்குத் தேவையுள்ள முக்கியப் பண்டங்களைப் பதுக்குவதும், சூதாட்ட பேரங்களில் ஈடுபடுவதும் சமூக விரோதச் செயல்களாகும்; இத்தகைய சமூக விரோதச் செயல்களுக்கு ஊக்கமளிக்காமலிருக்க நாட்டிலுள்ள வியாபாரிகள் சர்க்காருக்கு உதவி புரிவார்கள் என்று நம்புகிறேன்,"

—என்று, மத்திய உணவு அமைச்சர் ஏ. பி. ஜெயின் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

"மீண்டும் உணவுப் பங்கீடு, கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டுமென்று சில வட்டாரங்கள் கோரியிருக்கின்றன; ஆனால், நாட்டில் மீண்டும் கட்டுப்பாடுகள் ஏற்படுத்துவதை எதிர்க்க, எனக்குள்ள செல்வாக்கு அதிகாரம் எல்லாவற்றையும் உபயோகிப்பேன் என்று மக்களுக்கு உறுதி கூறுகிறேன்.

'உணவுத் தானியங்களின் விலை உயர்வைத் தடுப்பதற்கு, அவசியமான இடங்களில் கோதுமையை மணங்கு ரூ. 14 வீதமும், அரிசியை ரூ. 16 வீதமும் மொத்த விலைக்கு பகிரங்க 'மார்க்கெட்'டுகளில் இந்திய சர்க்கார் வழங்கும்.

"கிடங்கு வசதி ஏற்படுத்தும் திட்டத்தையும் மும்முரமாக நடத்திவைக்க சர்க்கார் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது; கிடங்கு வசதி ஏற்படுத்துவது, பதுக்கல்கள், சூதாட்ட பேரங்களைத் தடுப்பதற்குப் பெரிதும் துணைபுரியும்; செயற்கை ரீதியில் பற்றாக்குறை தோற்றுவிப்பதையும், பகிரங்க 'மார்க்கெட்' விலை உயர்வையும் ஒழி[illegible]த்துக்கட்டிவிடும்."

பிரிட்டனில் திடீர் வேலைநிறுத்தம்

950 கெமிகல் தொழிலாளர் நடவடிக்கை

ஸ்வான்சீ (வேல்ஸ்), ஜூலை 14—

இம்பீரியல் கெமிக்கல் தொழில்களைச் சேர்ந்த ஒரு பிரிவில், சுமார் 950 தொழிலாளர்கள், பெண் அதிகாரி ஒருவருடன் 'சண்டை' போட்டுக்கொண்டு, திடீரென வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர் என்று தெரியவருகிறது.

ஏற்கனவே சுமார் 250 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர் என்றும், அந்த வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாகவே இந்த 950 தொழிலாளர்களும் திடீர் வேலை நிறுத்தம் செய்தனர் என்றும் தெரியவருகிறது.

நம் நாடு

[illegible] ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 16—7—'56 திங்கள்

பாதிரியார் காட்டும் பாதை!

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தீவில் குடிபுகுந்து குடில் அமைத்து, குடி நடத்தத் துவங்கிய நாளிலிருந்து இன்றுவரை—குறுகிய கால இடைவெளிகளைத் தவிர, தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ளும் சுதந்திரத்தை இழந்து—எகிப்தியர்கள், பாரசீகர்கள், ரோமானியர்கள், துருக்கியர்கள், வெள்ளையர்கள்—என்று நெடுக, அடிமைகளாகவே காலந்தள்ளி வரும் சோகமயமான வரலாற்றை மாற்றியமைக்கத்தான், சைப்ரஸ் மக்கள், இன்று போர்க்கொடி உயர்த்தி யிருக்கிறார்கள்.

1869-ல் சூயஸ் கால்வாய் திறக்கப்படுகிறது; மத்திய தரைக் கடல் அலைகள், கீழை நாடுகளின் செல்வத்தைச் சுரண்ட மேலைநாடுகளின் கப்பல்களை மீண்டும் நகர்த்தத் துவங்குகின்றன; இந்தியாவில் 'மார்க்கெட்'டை நிரந்தரமாக்குவதற்கு சோப்பு சீப்புகளைத் தாங்கிச் செல்லும் கப்பல்களை வழி நடத்த இந்தப் பாதை பிரிட்டனுக்கு மிகவும் 'அத்தியாவசிய'மாகிவிட்ட நேரமும் அதுதான்! ரஷ்யாவுடன் துருக்கி போர் தொடுத்ததின் விளைவாக, இந்தப் 'பாதை'க்கு ஆபத்து நெருங்குவதை உணர்ந்த பிரிட்டன் ரஷ்ய 'ஆக்கிரமிப்பு' விரிவாகாமல் தடுக்க—என்று கூறி, அதுவரை துருக்கியின் பிடியிலிருந்த சைப்ரஸ் தீவினை, தளங்கள் அமைப்பதற்காக ஒப்பந்தம் ஒன்றின் மூலம் பெற்றுக் கொள்கிறது.

முதல் உலகப் போரில் நேச நாடுகளுக்கு எதிராகத் துருக்கி தோள்தட்டியதின் விளைவு, சைப்ரஸ் தீவு, பிரிட்டனின் ஏகாதிபத்திய நிலப்பரப்பைக் காட்டும் படத்தில் இடம் பெற்றுவிடுகிறது. யுத்தம் முடிந்தபின், 1925-ல், 'லாசன்னே உடன்படிக்கை'யின்படி, சைப்ரஸ், பிரிட்டனின் ஆதிக்கத்திலிருப்பதை துருக்கியும் அங்கீகரித்தது.

அன்றுமுதல் சைப்ரஸ், இன்னும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் காலனி;மத்தியதரை கடல் பகுதியில் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த தளம்—என்ற நிலையில்தான் இருந்து வருகிறது.

நான்கு இலட்சம் கிரேக்கர்கள்—எண்பத்தொன்பதாயிரம் முஸ்லீம்கள்—இதர் சில ஆயிரம் என்பது, சைப்ரஸ் மக்கள் தொகைக் கணக்கு.

நெடுங்காலமாகவே, 'அடிமைகளாயிருக்கும் அவல நிலை மாற வேண்டும்; நாங்கள் ஆளப்படுபவர்களாயிருக்க மாட்டோம்; எங்களை நாங்களே ஆண்டுகொள்வோம்; இதற்கான சுயநிர்ணய உரிமை—சுதந்திரம் எங்களுக்குவேண்டும்'—என்று முழக்கமிட்ட வண்ணம், சமீப காலமாக சைப்ரஸ் மக்கள் விடுதலைப் போரில் ஈடுபட்டிருக்கிறார்கள், வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு எதிராக!

உலகில் இன்னும் அடிமைகளாயிருப்போரின் பெரும்பான்மையினரின் எஜமானன் என்ற கேவலப் பெயராலேயே பிரிட்டிஷார் அழைக்கப்படுகின்றனர், முற்போக்காளரால்!

ஆனல், மேலைநாட்டு மிதவாதிகள் சிலர், பிரிட்டிஷார் இந்த இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், நிர்ப்பந்தம் காரணமாக சுயாட்சி வழங்கிவிட்ட சில நாடுகளைச் சுட்டிக்காட்டி, 'அவர்கள் ஏகாதிபத்திய குணம் சங்கலை விட்டொழித்துவிட்டு, 'பத்தாம் பசலி' சுரண்டல் நோக்கிலிருந்து ஓரளவு விடுபட்டு, நாகரிக மனப்போக்குடையவர்களாக — இதர ஏகாதிபத்தியவாதிகளுக்குப் பாடம் கற்றுத் தரும் முன் மாதிரியாளர்களாக மாறி வருகின்றனர்' என்று பாராட்டுகின்றனர்.

'இந்தப் பாராட்டுதலுக்குப் பிரிட்டிஷார் அருகதையாகும் காலம் இன்னும் கனியவில்லை' என்பதையே, சிங்கப்பூர், மற்றும் சைப்ரஸ் போன்ற நாடுகளின் விடுதலைப் போரை மதிக்க மறுக்கும் அவர்களது போக்கு எடுத்துக்காட்டுகிறது.

விடுதலைப் போரில் ஈடுபட்ட குற்றத்திற்காக மகாரியஸ் என்ற சைப்ரஸ் நாட்டு விடுதலை வீரனை நாடு கடத்தவும் வெட்கமின்றித் துணிந்தது, பிரிட்டன்!

விளைவு? பாதை காட்டும் அந்தப் பாதிரியைப் பிரிந்த சைப்ரஸ் மக்கள், வெறிகொண்டவர்களாகி வருகின்றனர்! அவர்களில் பலர், தீவிரவாதிகளாகவும் மாறிவிட்டனர்!

விடுதலைப் போராட்டத் தலைவரையே நாடு கடத்தத் துணிந்த வெள்ளையரின் காட்டுமிராண்டிக் குணம், அந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட வீரர்களை எத்தகு கொடூரமான அடக்குமுறைகளை ஏவி வாட்டி வதைக்கும் என்பதை வர்[illegible]க்கவா வேண்டும்?

சைப்ரசின் விடுதலைக் கோரிக்கையைச் சாகடிக்க, இந்தக் கொடூரமான அடக்குமுறைகள் மட்டும் போதாது என்று கருதும் பிரிட்டன், சதியிலும் சூழ்ச்சியிலும் வேறு ஈடுபட்டு வருகிறது.

சைப்ரசில் வாழும் சிறுபான்மையினரான துருக்கிய முஸ்லீம்களைச் சுட்டிக்காட்டி, சைப்ரசைச் சொந்தம் கொண்டாடுமாறு துருக்கியைத் தூண்டிவிட்டிருக்கிறது. சைப்ரசிற்குள்ளும் வழக்கமான 'பிரித்தாளும் சூழ்ச்சி'யைக் கையாளுவதற்குப் பிரிட்டன் தவறவில்லை!

இத்தனைக்குப் பிறகும், சைப்ரஸ் மக்களின் விடுதலைக் குரல் உச்சம் பெறத் துவங்கியிருக்கிறதே தவிர, தணியவில்லை; அது இயற்கையும்கூட!

சைப்ரஸ் கிரேக்கர்களுக்காகக் கிரீஸ்நாட்டு கிரேக்கரும், 'தான் ஆடாவிடினும் தன் தசை ஆடும்' என்ற வகையில் பிரிட்டனைத் தட்டிக் கேட்கத் தவறவில்லை. கிரீஸ் நாட்டில், சைப்ரசின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு நல்கும் ஆர்ப்பாட்டங்கள், கிளர்ச்சிகள் நடந்த வண்ணமுள்ளன. தாயகத்தோரைத் தழுவிக் கொள்ளத் துடிக்கும் சைப்ரஸ் மக்கள், இதனால் மேலும் போராட்டத்தைத் தீவிரமாக்கிக் கொண்டிருக்கின்றனர். 'பாதை காட்டும் மகாரியஸ் பாதிரியாரை எங்களிடம் ஒப்படைக்க வேண்டும்' என்ற குரல், பிரிட்டிஷ் பிரதமர் ஈடனின் காதுகளைத் துளைத்த வண்ணமுள்ளன.

வழக்கம்போல அவர், 'முதலில் பலாத்காரத்தைக் கைவிட வேண்டும்; பின்னரே 'அரசியல் சீர்திருத்தம்' பற்றிய பேச்சு' என்ற பழைய பல்லவியையே பாடுகின்றார்.

பலாத்காரத்தைத் தூண்டிவிட்டவர் எவர்?—விடை பகரவில்லை, ஈடன்!

சைப்ரஸ் மக்கள் கோருவது விடுதலை! விடுதலை!! விடுதலை!!! இவர் பேசுவதோ அரசியல் சீர்திருத்தம்!

'அரசியல் சீர்திருத்தம்' பற்றி ஆராய, ராட் கிளிப் என்ற ஒரு 'பிரபு'வை நியமித்திருப்பதாக பிரதமர் ஈடன், இங்கிலாந்து மக்கள் சபையில் அறிவித்திருப்பது, சைப்ரஸ் மக்களின் ஆத்திரத்தைத் தூண்டுவதற்குத்தான் உதவ முடியுமே தவிர, வேறெதற்குமல்ல!

முகம் அசிங்கப்படுமே என்பதற்காக, மகாரியஸ் பாதிரியாரை, தாயகம் திரும்ப பிரிட்டன் அனுமதிக்க மறுத்தால், விளைவு—சமீபத்திய எதிர்காலத்தில்—விபரீதமாகக்கூடிய ஆபத்தான நிலை இருக்கிறது.

சிதி முகம்மது பென் யூசுபை நாடு கடத்திவிட்டு, மொராக்கோ மக்களிடம், தங்கள் சகாக்களான பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் பட்டபாடு—படித்த பாடம், பிரிட்டிஷாரின் கவனத்திற்கு வருவது நல்லது.

விவேகமுடன் நடந்துகொள்வதற்கு என்றுமே காலங் கடந்துவிடுவதில்லை.

தனக்கேற்பட்டுள்ள அவப்பெயரைத் துடைக்க பிரிட்டன் மேற்கொள்ளும முயற்சி தோல்வியுறாமல் தடுத்துக்கொள்ளவும், சைப்ரஸ் மக்களின் கொழுந்துவிட்டெரியும் விடுதலைத் தாகம் மூட்டும் கோபக் கனலிலிருந்து தப்பித்துக்கொள்ளவும், பாதை காட்டும் பாதிரியாரை நாடு திரும்பச் செய்து, அவர் காட்[illegible] விடுதலைப் பாதையில் [illegible]ல்லாய் நில்லாமல், சைப்ர[illegible] வெளியேறுவதே பிரிட்[illegible]ப்பிடிக்க வேண்டிய [illegible] நாகரீகமான ஒரே வழிய[illegible]

உதவி கிடைக்குமா?

சென்னை, ஜூலை 15—

இந்திய சர்க்காரின் ஒப்புதல் கிடைக்கும் என்ற நம்பிக்கையின் மீது, சென்னை சர்க்கார் சேரிகள் சீர்திருத்த வேலையை மேற்கொள்ளுமாறு நகர சபைக்கு யோசனை கூறியிருக்கிறதாம்!

சர்க்கார் நிலங்களிலுள்ள சேரிகள் சம்பந்தப்பட்ட பூர்வாங்க வேலைகளை ஆரம்பிக்க வேண்டுமென்றும் சர்க்கார் குறிப்பிட்டிருக்கிறதாம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், சென்னை நகரில், சேரிகள் சீர்திருத்தத்திற்காக ரூ. 4,90,00,000 செலவில், சென்னை நகர சபை ஒரு திட்டம் வகுத்து, மத்திய சர்க்காரையும், மாநில சர்க்காரையும் உதவி கோரியுள்ளது.

பேச்சுவார்த்தை முறிவு

பாரிஸ், ஜூலை 13—

கூட்டுறவு உடன்படிக்கை நகல் தயாரிப்பதற்காகப் பிரான்சுடன் நடத்திவந்த பேச்சுவார்த்தையை டுனீசியா நிறுத்தி விட்டதாகத் தெரிகிறது. 'விரோத மனப்பான்மையே' இதற்குக் காரணமென்று கூறப்படுகிறது.

'மாதிரி சோஷலிச'த்திற்கு டில்லி வகுக்கும் நடைமுறை

கல்கத்தா, ஜூலை 13—

உணவுப் பொருளை பதுக்கிவைப்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அதிகாரம் வழங்குமாறு கோரிய மேற்கு வங்க சர்க்காருக்கு, 'முடியாது' என்று பதிலளித்து, டில்லி சர்க்கார், சோஷலிச பாணி சமூக அமைப்பிற்கு நடைமுறை வகுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

பதுக்கல்காரர் மீது நடவடிக்கை எடுத்தால், சந்தையில் உணவுப் பொருளே காணமல் போய்விடும் என்றும, தங்கு தடங்கல் இன்றி உணவுப் பொருள் மார்க்கெட்டில் கிடைக்குமாறு செய்வதே, பதுக்குவதைத் தடுக்க சிறந்த வழி என்றும் டில்லி சர்க்கார் கருதுவதாக மே. வ. முதன் மந்திரி டாக்டர் ராய், சட்டசபையில் கேள்விக்குப் பதிலளிக்கும் போது தெரிவித்திருக்கிறார்.

மணிமுடியும் கதர்க் குல்லாயும்!

அனுமந்தையா 'தமாஷ்'

பெங்களூர், ஜூலை 12—

"முடியணிந்த மன்னர்களே சஞ்சலப்படுவர் என்று கூறுவார்கள்; இன்றைய இந்தியாவில், முடியணிந்தோர் எவரும் இல்லை; இராசப் பிரமுகர் பதவிகளும் ஒழியப் போகின்றன; எனவே, இன்றைய சூழ்நிலையில், கதர்க் குல்லாய் அணிந்தோரே சஞ்சலத்திற்கு ஆளாகியுள்ளனர். கதர்க் குல்லாய் அணிந்தோர், ஏதேனும் பதவியிலிருக்கின்றனரோ இல்லையோ, கதர்க் குல்லாயணிந்தோரெல்லாம் சஞ்சலப்படுகின்றனர்,"

என்று, மைசூர் முதன் மந்திரி அனுமந்தையா வரவேற்புக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இறக்குமதித் தடையை நீக்கி விட்டனர்

புதுடில்லி, ஜூலை 13—

சிறுநிலச் சொந்தக்காரர்களும் இயந்திரக் கலப்பைகளை வாங்கப் பயன்படுத்துவதற்காக, இந்திய சர்க்கார், பத்து குதிரை சக்திக்குக் குறைவாக உள்ள இயந்திரக் கலப்பை (டிராக்டர்)கள் மீது விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கியுள்ளனர்.

செவ்வாய் கிரகத்தில் கரும்புள்ளிகள்!

கடலா – காய்கறித் தோட்டமா?

செவ்வாய் கிரகத்தில் காணப்படும் கரும் புள்ளிகள், கடல் அல்லவென்றும், அவைகள் உண்மையில் காய்கறித் தோட்டங்கள்தானென்றும் ரஷ்ய வானசாஸ்திர நிபுணர்கள் நம்புகின்றனராம்!

பூமியிலிருக்கும் வெட்ப - தட்ப நிலைகளும், செவ்வாய் கிரகத்திலுள்ள வெப்பத்திற்குமிடையே பல வேறுபாடுகளிருப்பதால், அங்குள்ள காய்கறிகள் இங்குள்ளவைகளைப்போல் இராதென்றும் கூறப்பட்டுள்ளது.

வருகிற செப்டம்பர் மாதத்தில் செவ்வாய் கிரகம் பூமிக்கு வெகு சமீபமாக வரவிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சூரிய சக்தியால் இயங்கும் வானொலிப் பெட்டிகள்

விற்பனைக்கு வந்துவிட்டதாம்!

நியூயார்க் ஜூலை 14—

உலகிலேயே முதன் முதலாக சூரிய சக்தியால் இயக்கும் வானொலிப் பெட்டிகள் அமெரிக்காவில் விற்பனைக்கு வந்துவிட்டதாம்!

இந்த வானொலிப் பெட்டி, மெல்லிய குழாய்கள் இல்லாமலும், சிறியதோர் கைப்பெட்டி போன்றும் உள்ளதாம்!

'பாட்டரி' அல்லது சிறிய மின்சார பல்பு மூலம் சூரிய சக்தியை இழுத்து, இவ்வானொலிப் பெட்டியை இயக்கவைக்கலாம்

'சூரிய சக்தி பாக்' எனும் கருவி மூலம் சூரிய சக்தி இழுக்கப்படுகிறது; இக்கருவி, வானொலிப் பெட்டியின் முதுகுப்புறத்தில் பொருத்தப்பட்டுள்ளது; அக்கருவி சூரியக் கிரணங்களை மின்சார சக்தியாக மாற்றுகிறது.

இந்த வானொலியில், ஒரே ஒரு குறை இருக்கிறதாம்; மப்பு மந்தாரமான நாட்களில் வானொலியை இயக்குவதற்கு, சூரிய சக்தியைத் தேக்கிவைத்துக்கொள்ளும் சாதனம் ஒன்றும் அதற்குக் கிடையாதாம்!

[illegible] திணிப்புக் குழு எதிர்பார்த்த [illegible]கிறது?

1965-ல் இந்தி ஆட்சிமொழியாகிவிட வேண்டுமாம்!

புதுடில்லி, ஜூலை 14—

எதிர்பார்த்தபடி, டில்லி ஏகாதிபத்தியவாதிகள் கோடிட்டுக் காட்டியுள்ளபடி, இந்தித் திணிப்புக் குழு, இந்தியை 1965 ஜனவரி முதல் தேதியிலிருந்து இந்தியாவின் ஆட்சி மொழியாக்கிவிட 'சிபாரிசு' செய்வதில் தவறுது என்று கூறப்படுகிறது.

இந்தி திணிக்கப்படும் கால வரம்பையேனும தள்ளி வைக்கவேண்டும் என்ற சிலரின் ஓலமும் கணக்கிலெடுத்துக்கொள்ளப்படாமல், சர்க்கார் இலாகாக்களிலும், இதர பொது வேலைகளிலும், இந்தியைத் துரிதமாகத் திணிப்பதற்கான வழிவகைகளையும் குழு; சிபாரிசு என்ற பெயரில் தெரிவிக்கவிருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

குழுவில் உள்ள டாக்டர் சுப்பராயன் உள்ளிட்ட சிலர், இந்தியைத் திணிப்பதில் அதிவேகம காட்டுவதை மட்டும் எதிர்த்துக் குறிப்பு எழுதுவார்களாம், அறிக்கையில்!

கட்டாயமாகக் கற்றுக் கொடுக்க வேண்டுமாம்!

புனா, ஜூலை 13—

நாடு முழுமையிலும் பள்ளி முதல் கல்லூரிகள் முடிய, எல்லாக் கல்லூரி நிறுவனங்களிலும் சவமொழி (சமஸ்கிருதம்) போதனையைக் கட்டாயமாக்குமாறு இந்திய சர்க்காரையும், மாநில சர்க்கார்களையும், இங்கு நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பேசுகையில் மக்கள் சபைத் தலைவர் அனந்தசயனம் அய்யங்கார் வற்புறுத்தியுள்ளார்.

தேவிகுளம், பீர்மேட்டிலிருந்து தமிழர்களைத் துரத்த சதியா?

திரு-கொச்சி சர்க்காரின் புதிய குடியமைப்புத் திட்டம்பற்றி ஒரு கண்ணோட்டம்

"தேவிகுளம், பீர்மேட்டை டாலர் விளையும் பூமியாக்கியவர்கள் தமிழர்கள் என்பதை எவரும் ஒப்புக்கொள்வர். உழைப்பதற்குத் தமிழனும், உண்ணுவதற்குப் பிறரும் என்ருல், அது அநீதியாகும் இருக்கிற தமிழர்களை மறைமுகமாக வெளியேற்றிவிட வேண்டுமென்று எந்த அதிகாரியும் துணியக் கூடாது.

"தேவிகுளம், பீர்மேட்டில் ஏற்கனவே இருப்பவர்களைக் குடி அமர்த்திவிட்டு, புதுக்குடியேற்றத்திற்கு ஆயத்தம் செய்ய வேண்டும். போபாலிலும், அந்தமானிலும் குடியேற ஆள் அனுப்புகையில், தேவிகுளம், பீர்மேட்டிலும் இங்குள்ளோர் குடியேற அனுமதிக்க வேண்டும் என்பதில் நாம் எதிர் அபிப்பிராயக்காரர்களல்ல; ஆனல், அங்ஙனம் குடியேற்றுவதில் தமிழனென்ருே, மலையாளிகளென்ருே பட்சபாதகமாக நடந்துக் கொள்ளக் கூடாதென்று கேட்டுக் கொள்கிருேம்",

என்று, 'குடி அமைப்புத் திட்டம்' என்ற தலைப்பில், 12—7—56 'தின மலர்' இதழ் தீட்டியுள்ள தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அத்தலையங்கத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

"தேவிகுளம், பீர்மேடு பிரதேசங்களில் சர்க்கார் குடி அமைப்புத் திட்டத்தை அமுல் செய்துவருகிருர்கள். திரு-கொச்சி மக்கள் தொகை நெருக்கடியைச் சமாளிக்க இது போன்ற குடி அமைப்புத் திட்டங்களை ஆதரிக்காமல் வழியே இல்லை; ஆனல், இதற்கு முன்பு நடந்த குடி அமைப்புத் திட்டங்கள் ஏன் தோல்வி அடைந்தன என்பதையும் சர்க்கார் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

"முன்புள்ள சர்க்கார், தனி மலையாளக் குடும்பங்கள் பலவற்றை மலைப் பிரதேசங்களில் குடியேற்றினர்கள்; ஆனல், அக்குடும்பத்தினர், சர்க்காரிடமிருந்து உதவித் தொகை பெற்றுக்கொண்டு, நாளாவட்டத்தில் அவர்களுக்குக் கிடைத்த பூமிகளையும் விற்றுவிட்டு ஓடிவந்துவிட்டதாக முன்பு தகவல்கள் வந்தன.

"பட்டணக்கரையில் இருந்தவர்களுக்கு மலைவாசம் திடீரென சரிப்பட்டுக் கொள்ளாது. மலைவாசத்தால் ஏற்படும் தற்காலிக இடையூறுகளைப் பொறுமையாகச் சகிக்கும் தன்மை வாய்த்தவர்களுக்குமட்டுமே அங்கு நிரந்தர வாசம் செய்ய முடியும். தேவிகுளம், பீர்மேட்டைத் தமிழர்கள், தங்கள் தாயகமாகக் கருதி வருவதால்தான் அவர்களுக்கு அங்கு நிரந்தர வாசிகளாக இருக்க முடிகிறது. அதற்காகத் தமிழர்கள்மீது ஆவேசப்படுவதில் அர்த்தமில்லை. தமிழர் மெஜாரிட்டியை வெட்டிவிட வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தின் பேரில்தான் முன்னைய மந்திரிகள் அரசாங்கத்தில், விறுவிறுப்பாகக் குடிஅமைப்புத் திட்டம் அமுல் செய்[illegible] பட்டது; குடியேறி[illegible], குடியேறிய [illegible]அப்பைப் போல் குடி இறங்குவதிலும் விறுவிறுப்பாக இருந்துவிட்டனர்.

"இப்போது மீண்டும் குடியமைப்புத் திட்டம் அமுலாகிறது. இதற்கிடையில் அங்கு நிரந்தரமாக இருக்கும் தமிழர்களைப் பலாத்காரமாகக் குடியிறக்குவதாகவும் சில செய்திகள் கூறுகின்றன. மூணறை அடுத்து குடியிருக்கும் சில தமிழர் குடும்பங்களை விரட்டியதாகக் கூறப்படுகிறது. அது வாஸ்தவமாக இருக்குமானல், அதற்காக யாரும் வருத்தப்படாமலிருக்க மாட்டார்கள்."

வெளிநாட்டு 'மிஷன்'களில் உத்தியோகம்

சர்க்கார் உத்தரவு

புதுடில்லி ஜூலை 12—

"இந்தியாவில் உள்ள வெளிநாட்டு 'மிஷன்'களில், தங்கள் உறவினர்கள் உத்தியோகம் பெறுவதானல் சர்க்கார் ஊழியர்கள், சர்க்காரின் முன் அனுமதி பெற வேண்டும்,"

என்று, சர்க்கார் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

சர்க்கார் ஊழியராயிருக்கும் ஒருவரின் கணவனே, மனைவியோ, வேறு உறவினரோ வெளிநாட்டு 'மிஷன்'களில் உத்தியோகம் பெறச் செல்லும்போது, சம்பந்தப்பட்ட இலாகாவிடம் அனுமதி பெறவேண்டும் என்று தெரியவருகிறது.

அம்பர் இராட்டைத் திட்டத்திற்கு உதவி

ரூ. 3½ கோடி இந்திய சர்க்கார் ஒதுக்குகிறது

புதுடில்லி, ஜூலை 13—

நடைமுதல் நிதி ஆண்டில், 'அம்பர் சர்க்கா' திட்டத்தை அமுல் நடத்துவதற்கு—'அம்பர் சர்க்கா' குழு சிபாரிசின்படி—மத்திய சர்க்கார், ரூ 3 26,70,000 அனுமதித்திருக்கின்றனர்

இத்தொகையில், ரூ 20,60,000 மானியமாகவும் ரூ. 4 இலட்சம் கடனாகவும் உடனடியாக வழங்கப்பட்டிருக்கிறது.

இவ்வாண்டில் 75 000 'அம்பர் சர்க்கா'வை உற்பத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் இத்திட்டத்தை அமுல் நடத்துகையில் ஏற்படும் செலவுகளின் அடிப்படையில், பல தவணைகளில் நிதி வசதி அளிக்கப்படக்கூடுமாம்.

தச்சநல்லூரில் ஒரு உலோகத் தகடு வார்க்கும் தொழிற்சாலை?

முயற்சிக்கப்படுவதாகத் தகவல்

திருநெல்வேலி, ஜூலை 14—

திருநெல்வேலியை அடுத்த தச்சநல்லூரில், உலோகத் தகடுகள் வார்க்கும் தொழிற்சாலை ஒன்று நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக இங்குள்ள பிரபல உலோக வியாபாரியான இராம சுப்பிரமணிய அய்யர் என்பார் தெரிவித்திருக்கிருர்.

உலோகக் கட்டிகள் தகடுகளாக மாற்றப்படுவதற்கு, இப்போது பம்பாய் அல்லது கிழக்கு பஞ்சாபிற்கு அனுப்பப்படுகின்[illegible]

"தச்சநல்லூரில் ஒரு 'ரோலிங்' தொழிற்சாலை நிறுவப்படுமானல், இதற்காகும் பெரும் போக்குவரத்துச் செலவு பெருமளவு குறைக்கப்பட முடியும்," என்றும் அவர் கூறியிருக்கிருர்.

ரூ. 15 இலட்சம செலவில்!

குழந்தைகளுக்கான காட்சி சாலை புதுடில்லியில் உருவாகுமாம்

புதுடில்லி, ஜூலை 14—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உத்தேசித்துள்ளபடி, குழந்தைகளுக்கான காட்சி சாலை ஒன்றை, ரூ. 15 இலட்சம் செலவில், புதுடில்லியில் நிர்மாணிப்பதென இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளனர்; ஓராண்டிற்குள் இது அமைக்கப்படும்.

'விசைத்தறிக[illegible] புகுத்தாதீர்'

'[illegible]வை நாசமாக்காதீர்'

அகமதாபாத், ஜூலை 12—

"விசைத்தறிகளைப் புகுத்துவதைப் பரவலாக்கும் திட்டத்தை இந்திய சர்க்கார் கைவிட வேண்டும்; இத்திட்டம், கைநெசவு, கைநூற்றல் தொழில்களின் நலன்களுக்குக் குந்தகம் விளைவிப்பதுடன், நாட்டின் எல்லாப்பகுதிகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் பாதகமாக இருக்கும்"

என்று, அகில இந்திய கதர், கிராமத் தொழில் போர்டு இந்தியப் பேரரசுக்கு சுட்டிக்காட்டியுள்ளது

என்ன பலன் கருதியோ?

சென்னை, ஜூலை 13—

டில்லி சர்க்கார், இந்தியத் துணைக்கண்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் விவசாயிகளை, கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவும், விவசாயப் பழக்கங்களைத் தெரிந்துகொள்ளவுமாக, ஒரு பிரதேசத்திலிருந்து மற்ருெரு பிரதேசத்திற்குக் கொண்டு சென்று, திரும்பச் செய்வதற்கான திட்டம் ஒன்றை வகுத்திருக்கிருர்களாம்.

தேர்ந்தெடுக்கப்படுகிற சில குடும்பங்களின் விருந்தாளிகளாக இந்த விவசாயிகள் இருப்பர் என்றும், ஒரு மாதம் முதல் இரண்டு மாதம் வரை தங்கும்போது அந்த விவசாயிகள், தங்களை விருந்தினராக ஏற்றுக்கொண்டிருப்பவர்களுடன், தினசரி வாழ்க்கையிலும், விவசாய வேலைகளிலும் கலந்து ஈடுபடுவர் என்றும் கூறப்படுகிறது.

இது குறித்த விபரங்களை டில்லி சர்க்காரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

ஆதாரக் கல்வி போதனு முறைக் கல்லூரி

சென்னை சர்க்கார் முயற்சி

சென்னை, ஜூலை 15—

பட்டதாரி ஆதாரக் கல்வி போதனு முறைக் கல்லூரி ஒன்றை சென்னை சர்க்கார் துவக்கக்கூடும். பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கிடைப்பது அரிதாக இருப்பது இதற்குக்காரணமென்று கூறப்படுகிறது; இந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான ஒரே வழி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்க அதிக நிறுவனங்களை ஏற்படுத்துவதுதான் என்று கருதப்படுகிறது.

சர்க்காரால் ஆரம்பிக்கக்கூடிய ஆதாரக் கல்வி பயிற்சி கல்லூரியில் 80 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. கல்லூரியை எங்கு அமைப்பது என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

இரண்டாம் திட்டத்தில்

கல்வி அபிவிருத்தி

சென்னை சர்க்கார் ரூ. 15 கோடி செலவிடுமாம்

சென்னை—

'சென்னை மாகிலத்தில், கல்வித் திட்டத்துக்காக இரண்டாவது திட்ட காலத்தில் மொத்தம் ரூ. 15 கோடி செலவிடப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனல், அடுத்த ஐந்தாண்டு காலதநில், கல்வித் துறையில் ரூ 15 கோடிதான் செலவிடப்படுமென்று அர்த்த மாகி விடாது. சாதாரணமாக, கல்வித் துறைக்குச் செலவிடப்படுகிற தொகைக்குமேல் அதிகப்படியாக ரூ 15 கோடி செலவிடப்படுமெனபதுதான் அர்த்தம்.

"வழக்கமாக இம்மாகில சர்க்கார், ஆண்டிற்கு ரூ. 9 கோடி கல்வித்துறைக்குச் செலவிடுகிறது எனவே, நமது பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் இப்போதுள்ள நிலையை பராமரித்து வருவதற்கு ரூ. 45 [illegible]டி அதிகமாக அவசியப்படும். கல்வி வசதிகளை முன்னிலும் அதிகமாய் பெருக்குவதற்காகவும், அபிவிருத்தி செய்வதற்காகவும் மேற்கொண்டு ரூ. 15 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. எனவே, மொத்த முதலீடு ரூ. 60 கோடியாக இருக்கும்"

என்று, சென்னை கல்வி இலாகா செயலாளர் ஆர். ஏ கோபாலசாமி, வானெலியில பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

கல்வித் துறை அபிவிருத்திக்காகக் கிடைக்கக்கூடிய ரூ. 15-கோடியில், ரூ 9 கோடி ஆதாரக் கல்வி உட்பட பிரதம கல்விக்கும், மீதி ரூ 6 கோடி இதர அம்சங்களுக்கும் செலவிடப்படுமென்றும் அவர் கூறினர்.

அந்த ரூ. 6 கோடியில் ரூ. 2 கோடிக்கும அதிகமாக இடைநிலைக் கல்விக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறதென்றும், அதில் ரூ. 1-கோடி உயர்தரக் கல்லூரிகள் போதனைத் தரத்தையும், உபயோகத்தையும் அபிவிருத்தி செய்வதற்காக மானியமாகக் கொடுக்கப்படுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

வெள்ளம் விளைவித்த நாசத்தின் எல்லை!

பீகாரில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினல், தர்பங்கா மாவட்டத்தில் மட்டும் 375 சதுரமைல்கள் தண்ணீரில் மூழ்கிவிட்டதாம்!

ரூ 50-இலட்சத்திற்கு மேற்பட்ட பயிர்களும், சொத்துக்களும் நாசமாகிவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விலகுகின்றனர்!

மலையாளப் பிரதேசக் காங்கிரஸ் கமிட்டியிலிருந்து சென்னையின் முன்னுள் சட்ட மந்திரி கே. பி. குட்டிக்கிருஷ்ண நாயரும், சி. கே. கோவிந்தன் நாயர் என்பவரும் விலகிவிட்டனரென செய்தி ஒன்று கூறுகிறது. இதுபற்றி அ. இ. காங்கிரஸ் தலைவருக்குத் தகவல் தரப்பட்டுள்ளதாம்.

திருமணங்கள்

11—7—56 காலை 10 மணிக்கு, தி. தா. லால்குடி, ஆலம்பாடி கிராமத்தில் தோழர் அ. பொன்னம்பலனர் தலைமையில், தோழர் ஏ. பி. ரெத்தினம்—தோழியர் எஸ். பி. பச்சையம்மாள் திருமணம் நடைபெற்றது. தோழர் எம். எஸ். மணி வாழ்த்துரை வழங்கினர். இத்திருமண நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 5 நன்கொடை தரப்பட்டது.

* * *

13—7—56-ல், ஒதியடிக்காட்டில், தோழர் வைத்திலிங்கம்—தோழியர் கமலம்பாள் திருமணம் தோழர் இரா. நடராசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் க. தருமலிங்கம், ஜி. சீனுவாசன், ப. அரங்கசாமி ஆகியோர் வாழ்த்துரைவழங்கினர். மணமக்களுக்கு நண்பர்களாலும், உறவினர்களாலும் வாழ்த்து மடல்களும், அன்பளிப்பும் அளிக்கப்பட்டன. இத்திருமண நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது.

* * *

ஆத்தூர் புதுப் பேட்டையில் நடைபெற்ற தோழர் செ. அங்கமுத்து—தோழியர் செல்லம்மாள் திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

11—7—56-ல், உடையகாட்டில் தோழர் சிவசாமி — தோழியர் ருக்மணி திருமணம், தோழர் வ இராமனுதன் தலைமையில் நடைபெற்றது. தோழர் ஆர். நடராசன், 'திருமணம்' என்பது பற்றிப் பேசினர். இரவு 8 மணிக்கு, முத்துப்பேட்டை மணமகன் இல்லத்தில் தோழர் க. தருமலிங்கம் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர். இதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

12—7—56 காலை9-30மணிக்கு, முத்துப்பேட்டையில் தோழர் லோகநாதன்—தோழியர் சரோசா திருமணம், தோழர் அரு. மு. கணபதி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வ இராமனுதன், ஆர். நடராசன், க. தருமலிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்; நண்பர்கள் பலர் வாழ்த்துமடல்கள வாசித்தளித்தனர்; அன்பளிப்புகள் தந்தனர். இதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

6—7—56-ல், பழனியில், தோழர் ஏ. காமராஜ்—தோழியர் மரகதம் திருமணம் நடைபெற்றது. இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

[நன்கொடைகள் யாவும் வரப்பெற்ருேம்—நன்றி —பொறுப்பாளர்.]

அனுதாபம்

9—7—56-ல், சென்னை 1-வது வட்ட தி. மு. க. துணைச்செயலாளர் தோழர் பட்டாபியின் தமையனர் தோழர் கோபால் இயற்கையெய்தியமை குறித்துக் கிளைக் கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஃ ஃ ஃ

9—7—56-ல், நல்லமங்கலம் தி. மு. கழகத் துணைத் தலைவர் தோழர் எஸ். மலைக்கனி அவர்கள் வாழ்க்கைத் துணைவியார் காளியம்மாள் இயற்கையெய்தியமைக்கு கிளைக் கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

சென்னையில் மும்முனைப் போராட்ட நினைவு நாள்!

சேப்பாக்கம்கூட்டத்தில் கருணாநிதி

சென்னை, ஜூலை 15—

தி. மு. கழகம் கடந்த 1953 ஜூலைத் திங்கள் 15-ம் நாள் நடத்திய மும்முனைப் போராட்டத்தின் நினைவு நாள் விழா இன்று சென்னையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

சேப்பாக்கம் தோழமைக் கழகச் சார்பில், பார்த்தசாரதி நாயுடு தெருவில் நடைபெற்ற ஓர் மாபெரும் பொதுக்கூட்டத்தில், பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

கூட்டத் துவக்கத்தில், தோழர் இராபர்ட், மற்றும் மீனநுமாரி என்ற சிறுமியும், கழகப் பண் பல பாடினார்கள்.

கூட்டத்திற்கு தோழர் மு. கோபால் தலைமை வகித்து மும்முனைப் போராட்டங்களைச் சுருக்கமாக விளக்கினார்.

அடுத்து, தோழர் மு. புரட்சி மணி சிறிது நேரம் பேசியதும். தோழர் டி. வி. நாராயணசாமி, மும்முனைப் போராட்டம் குறித்தும், இப்போதைய அரசியல் நிலை குறித்தும் உணர்ச்சிமிக்கதோர் உரை நிகழ்த்தினார்.

இறுதியாக தோழர் மு. கருணாநிதி அவர்கள் மும்முனைப் போராட்டம் குறித்தும், கழகத்தின் இலட்சியம் குறித்தும் சிறப்பானதோர் உரை நிகழ்த்தினார் (அவரது சொற்பொழிவு நாளைய இதழில் இடம்பெறும்).

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி நவிலுதலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது. (ந. கி.)

அவர் கருத்தில்!

"தேசிய மொழியாக இந்தி ஏற்கப்பட்டு, நடைமுறையில் இருந்துவந்தாலும்கூட, இந்தியைச் சுற்றுக்கொண்ட அநேகருடைய தாய் மொழியாக இந்தி ஆகிவிடாது; இந்தியைப் பரப்புவதினால் வட்டார மொழிகளின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தி நசுக்கிவிட முடியாது," என்று ஆந்திர முதலமைச்சர், ஐதராபாதில் கூறியுள்ளார்.

அருண்மொழி—வில்வம் திருமணம்

பொதுச்செயலாளர் தலைமையில் சிறப்புற நடைபெற்றது

சென்னை, ஜூலை 14—

தோழியர் அருண்மொழி—தோழர் ஏ. கே. வில்வம் வாழ்க்கை ஒப்பந்த விழா சென்னை கோகலே மண்டபத்தில், இன்று மாலை 5.30 மணியளவில், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

மணமக்கள் இருவரும் மாலை மாற்றிக்கொண்டு, திருமண உறுதி மொழி மேற்கொண்டு, துணைவர்களாயினர்.

மணமக்களை வாழ்த்தி துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத், கே. கே. நீலமேகம், சி. பி. சிற்றரசு, புலவர் நல்லன், கே. ஏ. மதியழகன், மூக்கை-ஆர். எஸ். பாண்டியன்; மு. கருணாநிதி, தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் பேசினர்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், அ. பொன்னம்பலனார், ம. பொ. சிவஞானம் உள்ளிட்ட எண்ணற்றோரிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

மணமக்களுக்கு பலர் வாழ்த்து மடல் வாசித்தளித்தனர்.

ஏராளமான பரிசுகள், மணமக்களுக்கு வழங்கப்பட்டன.

மணமக்கள் சார்பில் 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 10 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

பின்னர் மணமக்கள் இருவரும் நன்றி கூறிக்கொண்டனர்.

தலைவர் முடிவுரை கூறியதும், 'மணமக்கள் வாழ்க' என்ற வாழ்த்தொலியுடன், திருமண விழா இனிது முடிவுற்றது.

இரவு 8 மணியளவில், சென்னை 'மாடர்ன் கபே'யில் மணமக்கள், அனைவருக்கும் சிறப்பானதோர் விருந்து நடத்தி மகிழ்வித்தனர்.

திருவல்லிக்கேணியில் ஈ. வெ. கி. சம்பத் முழக்கம்

பல்லாயிரம் பேர் பங்கு கொண்ட சிறப்பான கூட்டம்

சென்னை, ஜூலை 13—

சென்னை 41-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், திருவல்லிக்கேணி பஸ் நிலைய அருகாமையில், இன்று மாலை 6-30 மணியளவில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு, ஏராளமான தாய்மார் உட்பட பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

தோழர் கா. அப்பாதுரையார் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி திராவிட இனச் சிறப்புமிகு வரலாறு குறித்தும், அதன் இன்றையத் தாழ்நிலை குறித்தும் சீரியதோர் உரை நிகழ்த்தினார்.

அடுத்து தோழர் என். ஜீவரத்தினம், கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினார்.

இறுதியாக, தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், மாநில மாநாடு செய்த திருப்பம் குறித்தும், கழகத்தின் திருச்சி மாநாட்டிற்குப் பிறகு நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்தும் அரியதோர் விளக்கவுரை ஆற்றினார்.

தலைவர் முடிவுரையுடன், நன்றி நவிலப்பட்டு கூட்டம் இனிது முடிவுற்றது. (ந. கி.)

ஆட்குறைப்பை எதிர்த்து சட்ட சபை முன் ஆர்ப்பாட்டம்!

1000 தாமோதர் நதிப் பள்ளத்தாக்குத் தொழிலாளர் நடவடிக்கை

கல்கத்தா, ஜூலை 15—

தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டத்தில் வேலை செய்யும் சுமார் 1000 தொழிலாளர்கள், தங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் ஆட்குறைப்பு 'நோட்டீசு'களைத் திரும்பப் பெற வேண்டுமெனக் கோரி சட்டசபை முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தினர் என்று தெரிகிறது.

இந்த விவாதத்தை சட்டசபையில் தோழர் ஜோதிபாசு என்ற உறுப்பினர் எடுத்துரைத்திருக்கிறார்.

முதன் மந்திரி ராய் பதிலளிக்கையில், தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டத்தில் வேலை செய்யும் பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் வேலைக்காலம் முடிவுற்றதும், அவர்களை வேறு நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்களில் வேலைக்கு அமர்த்திக் கொள்ளுவது பற்றி யோசித்து சிபாரிசு கூற குழு ஒன்று நியமிப்பது குறித்து இந்திய சர்க்கார் ஆலோசித்துக் கொண்டிருக்கின்றனர் என்று கூறியுள்ளார்.

'சுவிட்சர்லாந்திலிருந்து வெளியேறுக'

அல்ஜீரிய விடுதலை இயக்கத் தலைவருக்கு சர்க்கார் உத்தரவு

பெர்னே ஜூலை 15—

அல்ஜீரிய விடுதலை இயக்கத்தின் பொதுச் செயலாளரான எம். மௌலே மெர்பா சுவிட்சர்லாந்திலிருந்து வெளியேறிவிட வேண்டுமென போலீஸ்—நீதி இலாகா அறிவித்திருக்கிறது.

மெர்பா இப்போது, ஜூரிச் நகரில், பலத்த போலீஸ் கண்காணிப்பில் இருப்பதாகவும், இந்த வாரம் வெளியேற்றப்படுவார் என்றும் கூறப்படுகிறது.

இவரது அரசியல் நடவடிக்கைகளுக்காகவே இவர் வெளியேற்றப்படுகிறாராம்!

நேற்று முன்தினம், இவர், இவரது சகாக்கள் சிலரது இல்லங்கள் திடீரென சோதனை இடப்பட்டன என்றும், இவர்கள் பிரெஞ்சுத் தூதுவராலயத்தைத் தாக்கத் திட்டமிட்டதாகச் சந்தேகிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

மேலும், ஒரு மொராக்கோ மாணவர், தனது அரசியல் ஈடுபாடுகளைத் தொடர்ந்து வைத்துக் கொண்டிருந்தால் அல்ஜீரியாவை விட்டு, வெளியேற்றப்படுவார் என எச்சரிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

நெற்பயிர் சாகுபடி வாய்ப்புகள்

நாட்டில் நன்றாக இருக்கிறதாம்!

கல்கத்தா, ஜூலை 15—

"எதிர்கால நெற் பயிர் சாகுபடிக்கான வாய்ப்புகள் நாட்டில் மிகவும் நன்றாக இருக்கின்றன," என்று, இந்திய சர்க்கார் உணவு, விவசாய துணை மந்திரி கூறியுள்ளார்.

"இந்தியாவில் நெற்பயிராகும் இடங்களிலெல்லாம் இவ்வருடத்தின் ஆரம்பத்திலேயே போதிய மழை பெய்திருக்கிறது," என்றும் அறிக்கை ஒன்றில் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

'மகாரியஸ் பாதிரியார் நாடு திரும்ப[illegible] வேண்டும்'

முழுச் சுதந்திரம் தவிர [illegible]றதும் பெறமாட்டோம்'

'ராட் கிளிப் பிரபுவைச் சந்திக்கத் தயாராக இல்லை'

சைப்ரசில் விடுதலை முழக்கம்

நிகோசியா, ஜூலை 15—

"விடுதலைப் போராட்டத் தலைவரான மகாரியஸ் பாதிரியார் நாடு கடத்தப்பட்டிருக்கையில், சைப்ரசின் அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்காகப் பிரிட்டனால் நியமிக்கப்பட்டு இங்கு வரவிருக்கும் ராட் கிளிப் பிரபுவைச் சந்தித்துப் பேசுவதற்கு முடியாது,"

என்று, சைப்ரசில் உள்ள பிரதான நகரங்களின் நகரசபைத் தலைவர்கள் (மேயர்கள்) முடிவு செய்திருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

ராட் கிளிப் பிரபு பிரிட்டிஷ் பிரதமர் ஈடனின் உத்தரவுப்படி, சைப்ரசிற்கு ஒரு புதிய அரசியல் சட்டம் வகுப்பதற்காக இங்கு வந்து சேர்ந்தாராம்.

[illegible], எவரேனும் தன்னைச் சந்தித்துப் பேச விரும்பினால், தனது செயலாளருக்கு எழுதலாம் என, சர்க்கார் மூலம் முதல் அறிக்கை விடுத்தபோதுதான் மேயர்கள் மேற்கண்ட முடிவை மேற்கொண்டனராம்.

சைப்ரஸ் கிரேக்க ஆசிரியர் [illegible] சங்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், சைப்ரசின் சுயாட்சிக்கான பேச்சுக்களை நாடு கடத்தப்பட்டுள்ள மகாரியஸ் பாதிரியார் தான் நடத்தவேண்டும் என்றும், சுதந்திரத்திற்குக் குறைவான எதையும் சைப்ரஸ் மக்கள் பெற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்றும் கூறியிருக்கின்றனர்.

இதற்கிடையில் சைப்ரசில் உள்ள சிறுபான்மையினரான துருக்கியரின் தலைவர் டாக்டர் பாடில் குட்சுக் என்பார், பிரிட்டிஷாரின் இந்த நடவடிக்கையை வரவேற்பதாகக் கூறியிருக்கிறாராம்.

நேற்று, ராட் கிளிப் பிரபு தனது துணைவியாருடன் விமான மூலம் வந்தபோது, சைப்ரஸ் கவர்னர் சர் ஜான் ஹார்டிங் அவர்களை வரவேற்றிருக்கிறார்.

விமான நிலையத்திலிருந்து சர்க்கார் மாளிகைக்குப் பலத்த இராணுவப் பாதுகாப்புடன் துப்பாக்கி ரவைகள் துளைக்கமுடியாத காரில் ஏறிச் சென்றனர் என்று தெரியவருகிறது.

'ஸ்டாலின் சர்வாதிகாரம்' பற்றிய குருஷ்சேவ் கருத்து

இந்திய கம்யூனிஸ்டுகளின் முடிவு

"ரஷ்யாவில் சனநாயகம் குலைக்கப்பட்டதற்குப் பெருமளவுக்கு ஸ்டாலின்தான் பொறுப்பாளி; எனினும், எல்லா குறைபாடுகளுக்கும், தன்னிச்சைப் போக்குக்கும் ஒரு தனி மனிதரின் தவறுகள்தான் காரணம் என்று கூறுவது வரலாற்று அடிப்படை பற்றிய மார்க்சீய, லெனினிச வரையறுப்பு[illegible] முரண்பாடானது[illegible]"

என்று, இந்திய [illegible]வுடைமைக் கட்சி கருத்துத் தெரிவி[illegible]

புதுடில்லியில் கூடிய பொதுவுடைமைக் கட்சியின் மத்தியக் குழு சோவியத் யூனியனில் வளர்ந்துவிட்ட தனி நபர் செல்வாக்குப் பற்றி நீண்டதொரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

"ஸ்டாலின் உயிருடன் இருந்த காலத்தில் குறிப்பிடத்தக்க அளவு காணப்பட்ட 'ஸ்டாலின் வழிபாடு' எவ்வாறு வளர்ந்தது என்பது தெளிவாக விளக்கப்பட வேண்டும். வரைமுறை மீறிய, தன்னிச்சைச் செயல்கள் நிகழ எது காரணமாக இருந்தது என்பதும் ஆராயப்பட வேண்டும்; அப்போதுதான் தனி நபர் செல்வாக்கு வளரும் முறை பற்றிய சரியான கண்ணோட்டம் கிடைக்கும்"

என்று, அத்தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

மேலும் பொதுவுடைமைக் கட்சியின் மத்தியக் குழுவின் தீர்மானம் கூறியதாவது :—

"ரஷ்யாவில் கடுமையான தவறுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அத்தவறுகளைச் சரிசெய்வது மிக அவசியம். தனி நபர் செல்வாக்கு, வளர்ச்சி எதிர்த்துப் போராடப்பட வேண்டியதாகும் இந்த செல்வாக்கு வளர்வது மக்களுக்குள்ள முக்கியத்தன்மையையும், அவர்களுடைய ஆர்வத்தையும் குறைத்து விடக்கூடும்; ஆகவே, தனி நபர் செல்வாக்குக்கு எதிராக ரஷ்யப் பொதுவுடைமைவாதிகள், நடவடிக்கை எடுத்தது சோஷலிசத்துக்கு செய்த [illegible] சேவையாகும்

"ஸ்டாலின் காலத்தில் ரஷ்யா பெரிய அளவு முன்னேறியுள்ளது; உலகப் பொதுவுடைமை இயக்கமும் வளர்ந்துள்ளது; அந்தக் காலத்தில் நடந்த ஸ்டாலின் வாழ்வில் ஒரு பகுதியைப் பற்றி மட்டுமே குறை நிறை காணும்போக்கு பொது மக்களிடம் வியப்பை ஏற்படுத்தியுள்ளது. இதைப் பொதுவுடைமையின் பகைவர்கள் பயன்படுத்திக்கொண்டு மக்களைக் குழப்புகிறார்கள்; எனவே, ஸ்டாலின் சாதித்தவைகளைப் பற்றியும், இழைத்த தவறுகளைப் பற்றியும் ஒட்டு மொத்தமாகப் பரிசீலனை செய்து முடிவு காணவேண்டும். அப்போதுதான் தனிநபர் செல்வாக்கு வளர்வதையும் குழப்பத்தையும் தவிர்க்க முடியும்."

சென்னையில் உற்பத்தி தொழிற்சாலை!

புதுடில்லி, ஜூலை 14—

[illegible] ஆணி தயாரிக்கும் ஒரு தொழில் நிறுவனம், சென்னையில் [illegible] 'ஆக்செல்' வழங்கும் குழுவால் அனுமதிக்கப்பட்டுள்ளது; ஆண்டிற்கு 2000 [illegible] இந்த நிறுவனம் தயாரிக்கும்.

தானே [illegible] டீசல் எஞ்சின்களைப் பல [illegible] உற்பத்தி செய்வதற்கு [illegible] நிற்கு அனுமதி [illegible]ள்ளது; இம்மாதிரியான எஞ்சின்கள், ஆண்டிற்கு 600 வீதம் அங்கு தயாரிக்கப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.